**பாலு. சரவண சர்மா, புரோகிதர் - ஜோதிடர்,**
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர்,
தாம்பரம் மேற்கு, சென் னை 600 045

ௐ

கைத்தொலைபேசி : 98403 69677
மாற்று எண் 91691 69677
இணைய தளம்: www.prohithar.com

# புரோகிதர் துணையின்றி தலை வாசல் பூஜை செய்யும் முறை

- பூஜை செய்யும் இடம் கோமியம் அல்லது மஞ்சள்நீர் தெளிக்கவும் பின் 8 இதழ் தாமரை கோலம் போடவும்
- பட்டியலில் உள்ள அணைத்து பொருட்களும் தேவை
- பட்டியலையும் வாங்கிய பொருட்களையும் ஒப்பிட்டு சரி பார்க்கவும்
- குறித்த நல்ல நேரத்தில் பூஜையை துவக்கி நிறைவு செய்ய நன்கு திட்டமிடவும்
- திருஷ்டி பரிகாரம் சுற்றி உடைக்க கட்டிட தொழிலாளி குளித்து திருநீறு பூசியவர் தேவை.
- பாதசாரி, வாகன ஓட்டிகளின் பாதுகாப்பு முன்னிட்டு பூசணியை நடு சாலையில் உடைக்ககூடாது
- பூஜையின் பொழுது பாரம்பரிய கலாசார ஆடை உடுத்தவும்
- புத்துணர்ச்சிக்காக காரம், இனிப்பு, காபி அல்லது டீ ஏற்பாடு
- பழங்களை பிளாஷ்டிக் பையில் வைக்கவேண்டாம். திறந்த நிலையில் அல்லது குளிர் பதனியில் வைக்கவும்
- 5 சுமங்கலிகள் தேவை ( மரியாதை தாம்பூலம் சிவப்பு ரவிக்கை துணி அல்லது 11ரூபாய்)
- மேஸ்திரி & உதவியாளர்கள் 1 மணி நேரம் முன்னதாக வருகை தரவேண்டும்
- காமாட்சி விளக்கு காற்று அடித்தால் அணையாமல் ஒளிர்விட குண்டு பாத்திரம் (1 படி அளவு) தேவை

## பூஜைப்பொருள் கடை

| | |
|---|---|
| தரமான மஞ்சள் தூள் | 100 கிராம் |
| தரமான குங்குமம் | 50 கிராம் |
| மஞ்சள்கொம்பு | 50 கிராம் |
| குண்டு மஞ்சள் | 50 கிராம் |
| விபூதி | சிறியபொட்டலம் |
| பன்னீர் புட்டி | 50 மில்லி |
| சந்தனம் | 10 கிராம் |
| நவதான்யம் கலப்பு | 50 கிராம் |
| கட்டி கற்பூரம் | 100கிராம் |
| ஊதுபத்தி | |
| தரமான ந . எண்ணெய் | 200 மில்லி |
| திரிநூல் | 1 கட்டு |
| வெற்றிலை | 50 |
| பாக்கு | 25 கிராம் |
| சுன்னாம்பு | சிறியது |
| தீப்பெட்டி | 2 |
| வெல்லம் | 100 கிராம் |
| சிறிய கத்தி | 1 |
| நாட்டுச்சர்க்கரை | 50 கிராம் |
| அவல், பொரி, கடலை | 100கிராம் |
| பேப்பர் டீகப் | 25 |
| கோலமாவு | 100கிராம் |
| டிஷ்ய பேப்பர் | 1 கட்டு |

| | |
|---|---|
| பால் | 100 மில்லி |
| தயிர் | 100 மில்லி |

## இதர பொருட்கள்

| | |
|---|---|
| வாழை இலை | 3 |
| வாழை பழம் | 12 |
| கல்யாண பூசனி | 1 |
| எலுமிச்சை பழம் | 4 |
| பழங்கள் 5 வகை | தலா 1 |
| உரித்த தேங்காய் | 3 |
| பச்சரிசி | 1 கிலோ |
| இனிப்பு பலகாரம் | |

## பசுவிற்கு தானம்

| | |
|---|---|
| வெல்லம் | 250 கிராம் |
| கோதுமை தவிடு | 2 கிலோ |

## பூ வகையறா

வாசல் மாலை
பூச்சரம் 10 முழம்
உதிரிப்பூக்கள்
அருகன் புல்,
மா இலை கொத்து

## துணிக்கடை

பிள்ளையார் துண்டு 1
ரவிக்கை துணி ( தலை வாசல் )
கருப்பு, வெள்ளை, சிவப்பு துணி

## நகை கடை

நவரத்தினம் , பஞ்சலோகம்
தங்க, வெள்ளி காசு

## வீட்டிலிருந்து

*கவனம் தந்து அனைத்தும் கொண்டுவரவும்*

பெரிய பித்தளை சொம்பு 1
காமாட்சி விளக்கு
தீபம் அணையாமல் இருக்க குண்டு பாத்திரம்
தட்டு, மணி, தீபக்கலசம்
பஞ்சபாத்திரம் உத்திரனி
தாம்பாள தட்டு 3
பேசின் 2, சிறிய கப் 5
மர மணை 3 , மணை மேல் துணி
எண்ணெய் புட்டி
பழைய செய்த◌ தாள் 10
கைதுடைக்க பழைய துணி
கோணி1
கத்திரிக்கோல், சமையல் கத்தி
தேங்காய் உடைக்க கத்தி
கம்பி ஆணி 3 (வாசற்படிக்கு)
வாளி / பக்கெட் 1 + ஜக்கு
ஜமக்காளம்
குடி நீர் / டம்பளார்

## வருகை தரும் சுமங்கலிகளுக்கு தாம்பூலம் மரியாதை

5 ருபாய் காசு 21

# தலை வாசல் பூஜை செய்யும் முறை

## பூஜை முறை முன்னேற்பாடு

◆ அனைத்து பொருட்களையும் பழைய செய்திதாளின் மீது பிரித்து தயார்நிலையில் வைக்கவும்

◆ பூஜையிடத்தில் (கோலத்தின் மீது) பழைய செய்தித்தாளை பரப்பவும் அதன் மேல்...
வடக்கு நுனியாக தலைவாழையிலை போட்டு அதில் அரிசியிடவும்

◆ அரிசியின் மேல் மஞ்சள் பிள்ளையாரை வைக்கவும், அலங்காரம் செய்யவும்

◆ பிள்ளையார் முன்னால் இலை போட்டு அதில் வெற்றிலை, பாக்கு, மஞ்சள் கொம்பு, வெல்லம், இனிப்பு, பழங்கள் ஆகியவற்றை வைக்கவும்

◆ தட்டில் அவல், பொரி, கடலை, நாட்டுச்சர்க்கரை ஆகியவற்றை கலந்து வைக்கவும்

◆ திருஷ்டி பூசனி, திருஷ்டி எலுமிச்சை,திருஷ்டி தேங்காய் ஆகியவற்றை தயார் செய்யவும்

◆ பால், தயிர், பன்னீர் ஆகியவற்றை திறந்து அபிஷேகத்திற்க்கு தயாராக கப்பில் ஊற்றி வைக்கவும்

◆ தலைவாசலை கட்டிடத்தின் உள்புறம் ஈசான்ய பக்கத்தில் வைத்து கிழக்கு அல்லது வடக்கு நோக்கி அபிஷேகத்திற்க்கு தயாராக வைக்கவும்

◆ தலைவாசல் கீழ் பொக்கிஷம் (தங்கம் – வெள்ளி -நவரத்திரனம்) இட தலைவாசல் கீழ் குழி எடுக்கவும்

◆ வாசல்படிக்கு மாவிலை தோரணம் கட்டவும், பூ மாலை சாற்றவும் வசதியாக 3 ஆணிகளை அடிக்கவும்
ஒருபிடி அரிசியில் மஞ்சள்கலந்து அக்ஷதை தயார் செய்யவும்

## பூஜை துவக்கம் (குறித்த லக்னத்தில் பூஜையை ஆரம்பிக்கவும்)

◆ வாசலில் வெளியில் கோலம் போடவும், காமாட்சி தீபம் ஏற்றவும் ( அணையாமல் இருக்க குண்டு பாத்திரத்தில் வைக்கவும்)

◆ தாய், தகப்பனார், முதலில் எழுத்து கற்றுத்தந்த ஆசிரியர், தொழில் கற்றுக்கொடுத்த குரு, குலதெய்வம் பிள்ளையார் ,என
வரிசைப்படுத்தி மனதில் தியானிக்கவும்

◆ பூர்வீக சொத்தாக இருப்பின் முன்னோர்களின் பெயரை உச்சரித்து - மனதில் தியானித்து தெற்கு நோக்கி வணங்கவும்

◆ பிள்ளையாருக்கு விநாயகர் அகவல் துணைக்கொண்டு அருகம்புல்லால் அர்ச்சனை செய்யவும்
தேங்காய் உடைத்து தூபம், தீபம் காட்டவும்

◆ பிள்ளையார் முன் கைகளில் பூக்களை வைத்துக்கொண்டு மனதில் இறைவனை தியானித்து விரைவில் கட்டிட பணிகள் முடிந்து குடிபுக வேண்டும் என்றும் கல்வி , அறிவு, செல்வம், தொழில் , சந்ததி மேன்மை அடையவேண்டும் என்று பிராத்தனை செய்து பூக்களை இறைவனின் பாதத்தில் சமர்ப்பிக்கவும். திருநீரு இட்டுக்கொள்ளவும்

## தலை வாசல் அபிஷேகம்

◆ மனதில் குலதெய்வத்தை பிரார்த்தனை செய்து-ஓம் சிவாய நமஹ அல்லது ஓம் நாராயணாய நமஹ என்று உச்சரித்து

◆ அபிஷேகம் 5 அல்லது ஒற்றைப்படையில் சுமங்கலிகள் ஒன்று சேர்ந்து தலைவாசலுக்கு முறையே
கோமயம் (மஞ்சள் நீர்) - நீர்-பால்-தயிர்-நீர்-சந்தனம் கலந்த பன்னீர் -மஞ்சள்நீர் என வரிசைப்படி அபிஷேகம்

◆ தலைவாசலை நீர்கொண்டு தூய்மைபடுத்தி வாசல்படி முழுவதும் மஞ்சள் பூசி குங்குமம் இடவும்

◆ தலை வாசல் குழியில்
கோமயம் அல்லது மஞ்சள் நீர் தெளிக்கவும்

சுமங்கலிகள் நவதான்யம், நவரத்தினம், தங்ககாசு, வெள்ளி காசு, பஞ்சலோகம், மஞ்சள் அரிசி இடவும்

வருகை தந்தவர்கள் அனைவரும் நாணயம் 9 அல்லது 18 அல்லது 27 (கூட்டுத்தொகை 9) இடவும்

## வாசல் நிறுத்தம்

◆ சுமங்கலிகள் பிடிக்க தலைவாசலை நிலை நிறுத்தவும் கொத்தனார் தலைவாசலை மட்டம் பார்த்து நிலை நிறுத்தவும்

## வாசல் பூஜை

◆ வாசல்படிக்கு மாவிலை தோரணம் கட்டவும், பூ மாலை சாற்றவும் (முன்னதாகவே 3 ஆணிகளை அடிக்கவும்

◆ தலைவாசல் மேல் கருப்பு, வெள்ளை, சிவப்பு துணி கட்டவும்

**பூஜை**

- ◆ தலைவாசல் உச்சியில் கெஜலட்சுமி வாசம்
- ◆ தலைவாசலுக்கு ஊதுபத்தியால் தூபம் காட்டவும்
- ◆ தேங்காய் உடைத்து, கீழ் இருந்து மேலாக கற்பூர தீபாராதனை காட்டவும் (மனதில் குலதெய்வத்தை நினைத்து)
- ◆ சுமங்கலிகள் தீபாராதனையுடன் வாசலை 3 முறை தாண்டவும் (சரஸ்வதி, லட்சுமி, அம்மன் பிரவேசமாக பாவித்து)
- ◆ வாசற்படியை தொட்டு கும்பிடவும், கண்ணில் ஒற்றிக்கொள்ளவும்

**திருஷ்டி** வாசற்படிக்கு பூசனி, தேங்காய், எலுமிச்சை என வரிசைப்படி திருஷ்டி சுற்றவும்

**மரியாதை தாம்பூலம்**

- ◆ சுமங்கலிகளுக்கு மரியாதை தாம்பூலம்
- ◆ பெண் கட்டிட தொழிலாளிக்கு மரியாதை தாம்பூலம்
- ◆ கொத்தனாருக்கு தட்சனை-மரியாதை தாம்பூலம்
- ◆ அவல்,பொரி, கடலை பிரசாதத்தை அனைவருக்கும் தரவும்



**தலைவாசலில் மேற்புறம் கஜலட்சுமி படம் அல்லது மர சிற்பம் நன்று**

**இனிப்பு - சிற்றுண்டி :** வருகை தருபவர்களுக்கு பிரசாதம் விநியோகம் மற்றும் **சிற்றுண்டி ஏற்பாடு**

**மீதம் உள்ள பூஜை பொருட்களை அருகில் கோவிலில் ஒப்படைத்தல்**

**காரணகாரியம் – வழிபாடு**

- ◆ தூபம் – வாசனை – மூக்கு – ஊதுபத்தி / சாம்பிராணி
- ◆ நெய்வேத்யம் – வாய் – பழம், வெற்றிலை பாக்கு
- ◆ தீபம் – கண்களுக்கு ஒளி -
- ◆ மணி ஓசை / இறைவனின் திருநாமம் உச்சரித்தல் – காதுகளுக்கு
- ◆ தரையில் சேவித்தல் - அங்கம் புழுதிபட – இறைவனின் திருப்பாதைத்தை நினைத்து பூமியை தொடுவதாகும்
- ◆ தியானித்தல் (6ஆம் நிலை) பரம்பிரம்மமாக எங்கும் வ்யாபித்திருக்கும் உருவமற்ற அந்த மூலத்தை வணங்கல்

**சுபம்**

கிரகப்பிரவேசம் குறித்து விரிவாக அறிய கீழ்கண்ட இணையத்தை பார்வை இடவும்

www.prohithar.com




**பாலு சரவண சர்மா**
பரம்பரை பாரம்பரிய புரோகிதர் – ஜோதிடர் – பஞ்சாங்க கணிதர்
98403 69677